தேதி 18.04.2025 நேரம் மாலை 6.10 மணி

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

***தலைப்புச் செய்திகள்***

- இந்தியா-அமெரிக்கா இடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில், இந்தியா உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- யுனெஸ்கோவின் உலக பதிவேட்டில், பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரம் சேர்க்கப்பட்டு இருப்பது, இந்தியர்களை பெருமிதம் கொள்ள செய்திருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், நாட்டின் மின்னணு உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- புனித வெள்ளியை ஒட்டி,புதுச்சேரியில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் நடைபெற்ற சிலுவைப் பாதை நிகழ்ச்சியில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

***பிரதமர்-எலன் மஸ்க் 1 (5)***

இந்திய-அமெரிக்கா இடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில், இந்தியா உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இன்று அவர் டெஸ்லா நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி எலன் மஸ்குடன், அதிகாரப்பூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்....

*பிரதமர்-எலன் மஸ்க் 2 (12)*

இந்த ஆண்டின் தொடக்கத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்தின் போது, வாஷிங்டன்னில் டெஸ்லா நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி எலன் மஸ்குடனான சந்திப்பின் போது விவாதிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. இந்தியா-அமெரிக்கா இடையேயான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளில் இந்தியா-அமெரிக்கா இடையேயான மகத்தான வாய்ப்புகளை பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்த துறைகளில், இருநாடுகளின் ஒத்துழைப்பின் மூலம், மேலும் முன்னெடுத்து செல்வதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை அவர் எடுத்துரைத்தார். இந்த சந்திப்பு குறித்து சமூக ஊடகத்தில் பதிவிட்டு, மகிழ்ச்சி வெளியிட்டுள்ள அவர், அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை இந்தியா மேம்படுத்தும் என தெரிவித்தார்.

*யுனெஸ்கோ பிரதமர்* (8)

யுனெஸ்கோவின் உலக நினைவக பதிவேட்டில், பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரம் சேர்க்கப்பட்டு இருப்பது, உலகம் முழுவதும் உள்ள இந்தியர்களை பெருமிதம் கொள்ள செய்திருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நம் நாட்டின் கலாச்சாரத்திற்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம் இது என்றும் அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரத்தில் உள்ள கருத்துக்கள் அனைவரையும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன என்றும், பல நூற்றாண்டுகளாக நாகரீகத்தை வளர்க்க துணை நிற்பதாகவும் பிரதமர் புகழாரம் சூட்டி உள்ளார்.

*__அஷ்வினி வைஷ்ணவ்__* (10)

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், நாட்டின் மின்னணு உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளதாக, மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்னணு பொருட்கள் ஏற்றுமதி கடந்த 10 ஆண்டுகளில் 6 மடங்கு உயர்ந்து இருப்பதாகவும், மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தித் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை அண்மையில் அனுமதி அளித்தது, இத்துறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாகவும் கூறினார். இத்துறையின் கீழ், வரும் காலங்களில், வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும் என மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்தார்.

*__பாதுகாப்பு அமைச்சகம்__* (10)

இந்தியா-இங்கிலாந்து இடையேயான பாதுகாப்பு தொழில் துறை மாநாடு லண்டனில் நிறைவடைந்தது. இந்த 2 நாள் மாநாட்டில் பங்கேற்று பேசிய இந்திய பாதுகாப்புத் துறை செயலர் திரு. ராஜேஷ் குமார் சிங், பாதுகாப்பு தொழில்துறை சார்ந்த இந்திய புத்தொழில் நிறுவனங்களின் செயல்பாடு குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்து இருப்பதாக தெரிவித்தார். உத்தரபிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பாதுகாப்பு தொழில்துறை நிறுவனங்களில் முதலீடு செய்ய, இங்கிலாந்தில் உள்ள நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் அப்போது அவர் கேட்டுக் கொண்டார். பாதுகாப்பு தொழில் துறையை வலுப்படுத்துவதில், இங்கிலாந்தும், இந்தியாவும் இணைந்து செயல்பட்டு வருவதாக திரு. ராஜேஷ் குமார் தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சகம் (8)

மேற்கு வங்கத்தின் முஷிதாபாத்தில் நடந்த கலவரம் குறித்த வங்கதேச அரசின் கருத்துக்களை இந்தியா நிராகரித்துள்ளது. இதுகுறித்து வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், வங்கதேசத்தில் உள்ள சிறுபான்மையினர் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதற்கு எதிராக இந்தியா தனது கவலையை தெரிவித்து வரும் நிலையில், மேற்கு வங்க கலவரம் குறித்த வங்கதேச அரசு கருத்து வெளியிடுவதை இந்தியா நிராகரிப்பதாகவும், வங்கதேசத்தில் உள்ள சிறுபான்மையினர் நலனை பாதுகாப்பதில் அந்நாட்டு அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

வேவ்ஸ் (13)

வருகிற மே மாதம் மும்பையில் நடைபெற உள்ள வேவ்ஸ் உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து ஜியோ உலக மாநாட்டு மையத்தில், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், துறை சார்ந்த அதிகாரிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதற்கிடையே, உலக ஆடியோ விஷூவல் பொழுதுபோக்கு உச்சி மாநாடான வேவ்ஸ்-இன் Creative in India Challenge போட்டியின் வெற்றியாளர்களை இந்திய இசைத் துறையுடன் இணைந்து, தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், அறிவித்துள்ளது. தீம் இசைப் பிரிவில், 6 வெற்றியாளர்கள் பட்டியலில், தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. பவகணேஷ், திரு. ஜெயனந்தன், திரு. அபிஷேக் ராஜா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். முறையே 3,4,5ஆம் இடங்களை பிடித்துள்ள இவர்கள் மே மாதம் 1ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ள வேவ்ஸ் மாநாட்டில் தங்களின் படைப்புகளை காட்சிப்படுத்துவார்கள்.

*பாரம்பரிய தினம்* (9)

உலக பாரம்பரிய தினம் இன்று கொண்டாடப்படுகிறது. கலாச்சார இயற்கை பாரம்பரியத்தின் மதிப்பையும், அதனை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்நாள் ஆண்டு தோறம் ஏப்ரல் 18ஆம் தேதி கொண்டாடப் படுகிறது. இயற்கை பேரிடர் மற்றும் மோதல்களால் அச்சுறுத்தலுக்குள்ளான பாரம்பரியம் என்பதை இந்த ஆண்டின் கருப்பொருளாக கொண்டு, இந்த தினம் கடைப்பிடிக்கப் படுகிறது. இந்நாளை ஒட்டி நாடு முழுவதும் உள்ள இந்திய தொல்லியல் துறையின் நினைவுச் சின்னங்களை சுற்றுலா பயணிகள் கட்டணம் இன்றி பார்வையிட அனுமதிக்கப் படுவதாக, தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

*புனித வெள்ளி-புதுச்சேரி 1 (5)*

ஏசு பிரான் சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி, உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களால் இன்று அனுசரிக்கப்பட்டது. புதுச்சேரியில் உள்ள கிறிஸ்தவ தேவாயலங்களில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனை மற்றும் சிலுவைப் பாதை நிகழ்ச்சியில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டு, பிரார்த்தனை செய்தனர்.

*புனித வெள்ளி-புதுச்சேரி 2 (15)*

ஏசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு 40 நாட்கள் உபவாசம் இருந்த நாட்களை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் தவக் காலமாக கடைபிடிக்கின்றனர். இந்த தவக் காலத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமைக்கு முந்தைய வெள்ளிக் கிழமை புனித வெள்ளியாக அனுசரிக்கப் படுகிறது. ஏசுபிரான் சிலுவையில் அறையப்பட்டதை நினைவுக் கூறும் வகையில் இந்நாள் அனுசரிக்கப் படுகிறது. புனித வெள்ளியை முன்னிட்டு, புதுச்சேரி தூய ஜென்மராக்கினி அன்னை

பேராலயத்தில், புதுச்சேரி கடலூர் மறை மாவட்ட பேராயர் பிரான்சிஸ் காலிஸ்ட் தலைமையில் சிலுவைப் பாதை ஊர்வலமும், சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. ஆலயத்தில் இருந்து தொடங்கிய சிலுவைப் பாதை பேரணியில், பேராயர் சிலுவையை சுமந்த முன்னே செல்ல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் பின் தொடர்ந்து சென்றனர். இதேப் போல் புதுச்சேரியில் உள்ள தூய இருதய ஆண்டவர் பசிலிக்கா பேராலயம், வில்லியனூர் மாதா பேராலயம் உள்ளிட்ட பல்வேறு பேராலயங்களில் சிலுவைப் பாதை நிகழ்ச்சி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

*சைபர் க்ரைம்* (11)

மத்திய அரசு திட்டமான பிரதான் மந்திரி கிசான் நியூ யோஜனா பெயரில் புதுவிதமான இணைய வழி மோசடி நடத்தப்படுவதாகவும், இப்பெயரில் வரும் போலி செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டாம் என்றும் புதுச்சேரி இணைய வழி போலீசார் எச்சரித்துள்ளனர். அவ்வாறு பதிவிறக்கம் செய்யும் பட்சத்தில், கைபேசி Hack செய்யப்பட்டு வங்கிக் கணக்கில் இருந்து பணம் திருடப்படும் என்றும், மேலும், வாட்ஸ் குழுக்களும் Hack செய்யப்படும் என்று புதுச்சேரி இணையவழி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்த புகார்களை 1930 என்ற கட்டணமில்லா இலவச தொலைபேசி எண்ணையோ அல்லது 0413-22 76 144 மற்றும் 94 89 20 52 46 என்ற எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என புதுச்சேரி இணையவழி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

***புதுச்சேரி பல்கலைக்கழகம்*** (9)

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, புதுடெல்லியில் நேற்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானை, மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின் போது பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட்ட கல்வி முன்னேற்றங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை பேராசிரியர் பிரகாஷ் பாபு எடுத்துரைத்தார். மத்திய கல்வி அமைச்சரை, புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு நேரில் வருகை தருமாறும், இங்குள்ள கல்வித் திட்டங்களை பார்வையிடவும் அப்போது அவருக்கு அழைப்பு விடுத்தார்.

***மல்லாடி கிருஷ்ணாராவ்*** (11)

புதுச்சேரி அரசின் டெல்லிக்கான சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், நேற்று புதுடெல்லியில், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டாவை சந்தித்து, ஏனாம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளுக்கு என தனி புற்றுநோய் சிகிச்சை மையம் அமைத்து தரவேண்டும் என, கோரிக்கை மனு அளித்தார். மேலும், ஏனாம் பகுதியில் காரைக்காலில் உள்ளதை போல் ஜிப்மர் சார்பில் மருத்துவம் மற்றும் துணை மருத்துவ படிப்புகளுக்கான கல்லூரி அமைக்க வேண்டும் எனவும், கேட்டுக் கொண்டுள்ளதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார். மேலும், மத்திய சுற்றுலாத் துறை செயலர் திரு. சுமன் பல்லாவை சந்தித்து, ஏனாமில் மேற்கொள்ப்பட உள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியை விடுவிக்கும் படியும் கேட்டுக் கொண்டதாக எமது நிருபர் தெரிவிக்கிறார்.

## <u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>

இந்திய உற்பத்தி மற்றும் சேவைத் துறையின் மொத்த ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 5.5 சதவிகிதம் அதிகரித்து, 820.93 பில்லியன் டாலராக சாதனை அளவை எட்டி உள்ளது.

மக்கள் சேவைக்கான இந்திய ரயில்வேயின் கடமைப் பற்று, 172 ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடிப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

புதுச்சேரியில், பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மத்திய மீன்வளத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜார்ஜ் குரியன் இன்று தொடக்கி வைத்தார்.

நாட்டின் மொத்த மீன் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில், 95 லட்சம் டன்னில் இருந்து, 184 லட்சம் டன்னாக அதிகரித்து இருப்பதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

### <u>புதுச்சேரி பிளாஸ்டிக் (8)</u>

மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை அமைச்சகம் சார்பில் 2024ஆம் ஆண்டில், ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தடையை சிறப்பாக அமல்படுத்திய மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் தேசிய அளவில் புதுச்சேரிக்கு 3ஆம் இடம் கிடைத்துள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டு முதல், ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐபிஎல் (5)

ஐபிஎல் 20,20 கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்றிரவு 7.30 மணிக்கு பெங்களூருவில் நடைபெற உள்ள ஆட்டத்தில், பெங்களூரு அணி பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது. நேற்று நடைபெற்ற மும்பையில் நடைபெற்ற ஆட்டத்தில், மும்பை அணி, ஹைதராபாத் அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

சுங்கவரி (13)

மே 1ஆம் தேதி முதல், செயற்கைக் கோள் அடிப்படையிலான சுங்கவரி விதிப்பு குறித்து, இன்னும் முடிவெடுக்கப் படவில்லை என மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சகம் தெளிவுப்படுத்தி உள்ளது. ஊடகங்களில் வெளியான தவறான தகவல்களை மறுத்துள்ள அமைச்சகம், சுங்கச் சாவடி வழியாக தடையின்றி வாகனங்கள் செல்லவும், பயண நேரத்தை குறைக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சுங்கச் சாவடிகளில் ANPR-FASTAG அடிப்படையிலான, தானியங்கி கட்டண முறை செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இந்த முறையை செயல்படுத்துவதற்கான முயற்சிகளில், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஈடுபட்டுள்ளதாகவும், சோதனை அடிப்படையில் முயற்சித்த பின்னர், நாடு முழுவதும் இதனை அமல்படுத்துவது குறித்து முடிவு எடுக்கப்படும் என நெடுஞ்சாலை துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.